# 3

# பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு

*சக்தி வழங்கல், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகள் அதேபோன்று நலன் மற்றும் கல்வி பணிகளில் முன்னேற்றம் என்பவற்றுடன் இணைந்து பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வழங்கலை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட வழிமுறைகள் தொடர்ந்தும் இடம்பெற்றன. செலவைப் பிரதிபலிக்கக்கூடிய உள்நாட்டு எரிபொருள் விலையிடலை உறுதிசெய்வதற்கு பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, உலக மசகெண்ணெய் அதிகரிப்பிற்கு எதிராக உள்நாட்டுப் பெற்றோலிய விலைகள் 2015 சனவரியிலிருந்து முதலாவது பாரிய திருத்தமொன்றாக 2018 மேயில் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இதனைத்தொடர்ந்து தொடர்ச்சியாக சில சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சாதகமான வானிலை நிலைமைகளினால் துணையளிக்கப்பட்ட அதிகரித்த நீர் மின்வலு உற்பத்தியின் காரணமாக 2018இன் முதல் ஏழுமாதங்களில் மின்சார உற்பத்தியில் அணல் சக்தியின் மீதான தங்கியிருத்தல் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொதுவாக செலவு அறவீட்டு மட்டங்களுக்கு கீழ் காணப்படுகின்ற மின்சாரத் தீர்வைகள் மின்சாரத்திற்கும் செலவுப் பிரதிபலிப்பு தீர்வையொன்றை விரைவாக பின்பற்றுவதற்கான தேவைப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது. போக்குவரத்து உட்கட்டமைப்பு தொடர்பில் வீதி மற்றும் விரைவுப்பாதை வலையமைப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்கான பல செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றன. துறைமுக நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைத் தொடர்ந்தும் பதிவுசெய்த அதேவேளை சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் செயலாற்றமானது குறிப்பாக அதிகரித்த சுற்றுலா பயணிகளின் வருகையுடன் மேம்பட்டது. அதேவேளை, அரசாங்கம் சமூக உட்கட்டமைப்பு சேவை வழங்குதல் தொடர்பில் தனியார் துறை பங்கேற்றலின் அதிகரித்த துணையுடன் அத்தகைய சேவையினைத் தொடர்ந்தும் வழங்கியிருந்தது. தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி என்பவற்றின் மீது பாரியளவு கவனம் செலுத்தலுடன் கல்வித் துறையில் காணப்படும் சில வளத் தடைகளை தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. மீளாய்வுக் காலப்பகுதியில் குறிப்பாக வைரஸ் மற்றும் மஞ்சற்காமாலை போன்ற தொற்றும் நோய்களின் தாக்கங்கள் அதிகமாக காணப்பட்டபோதிலும் பொதுமக்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் வகையில் நலத்துறை தொடர்ச்சியாக ஆதரவளித்திருந்தது. மேலும், சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்கள் சமூகத்தில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற வகுப்பினருக்கு தொடர்ந்தும் ஆதரவளித்திருந்தது. எவ்வாறாயினும் நாட்டில் இடம்பெற்றுவரும் குடித்தொகை மாற்றம் மற்றும் கட்டமைப்பு சார்ந்த மறுசீரமைப்புக்கள் என்பவற்றுக்கு மத்தியில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை சிறப்பாக இலக்கிடுவதற்கான தேவையும் தீர்க்கப்படவேண்டியுள்ளது. முன்னோக்கி பார்க்கையில், குறிப்பாக பொது வளங்களின் கிடைப்பனவில் காணப்படும் மட்டுப்படுத்தல்கள் தன்மையின் பின்னணியில் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு ஆகிய இரண்டினையும் அபிவிருத்தி செய்தல் மற்றும் பேணுதல் என்பவற்றின் மீது அதிகளவிற்கு தனியார் துறையின் பங்கேற்பினை ஊக்குவிப்பது அத்தியாவசியமானதாகும்.*

3

## பொருளாதார உட்கட்டமைப்பின் அபிவிருத்திகள்

### பெற்றோலியம்

- **2017இன் நடுப்பகுதி முதல் அவதானிக்கப்பட்ட உலக மசகெண்ணெய் (பிறெண்ட்) விலைகளின் மேல்நோக்கிய போக்கு 2018இன் முதல் ஒன்பது மாதங்களிலும் தொடர்ந்தது.** பிரதானமாக 2018இன் இறுதிவரையான காலப்பகுதி வரைக்கும் பெற்றோலிய உற்பத்தியினை குறைக்கும் நோக்கில் பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பினாலும் அவ்வமைப்பின் அங்கத்தவரல்லாத பெற்றோலியம் உற்பத்திசெய்கின்ற ஏனைய நாடுகளினாலும் அவர்களின் ஒப்பந்தத்தினை நீடிப்பதற்காக 2017 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் காரணமாக 2014 திசெம்பரின் பின்னரான காலப்பகுதியில் முதற்றடவையாக பீப்பாயொன்றிற்கான பிறெண்ட் விலையானது 2018 சனவரி நடுப்பகுதியில் ஐ.அ.டொலர் 70 இனை விஞ்சியது. ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான அதிகரித்த எரிபொருள் உற்பத்தியுடன் 2018 பெப்புருவரியின் போது விலை அதிகரிப்பானது குறித்த அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மத்திய கிழக்கில் காணப்பட்ட புவிசார் அரசியல் பதற்றம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவினால் ஈரான் மீது வர்த்தகத் தடைகளை மீள்விதிப்பதற்கான சாத்தியம் மீதான சந்தை ஊகிப்பு போன்றவற்றின் விளைவாக பிறெண்ட் விலைகள் அதன் பின்னர் தொடர்ந்தும் அதிகரித்தன. இதன் விளைவாக, பிறெண்டின் சராசரி விலை 2018 மே மாதமளவில் பீப்பாயொன்றுக்கு ஐ.அ.டொலர் 76.88 ஆக அதிகரித்தது. எனினும், பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு உற்பத்திக் குறைப்பினை முடிவுக்குக் கொண்டுவரும் என்ற எதிர்பார்க்கையின் காரணமாக 2018 யூன் ஆரம்பம் தொடக்கம் ஒகத்து நடுப்பகுதிவரை உலக எரிபொருள் விலைகள் ஒரேமாதிரியான கீழ்நோக்கிய அசைவினை காண்பித்தன. எவ்வாறிருந்த போதிலும் ஈரான் மீதான ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தகத் தடைகளிலிருந்து தோன்றுகின்ற வழங்கல் கரிசனைகள் 2018 ஒகத்து நடுப்பகுதியிலிருந்து எரிபொருள் விலைகளில் கீழ்நோக்கிய போக்கில் திருப்பமொன்றினை ஏற்படுத்தியது. இதன்விளைவாக, 2018 செத்தெம்பர் இறுதியளவில் பிறெண்ட் விலை பீப்பாயொன்றுக்கு ஐ.அ.டொலர் 81.93 ஆக அதிகரித்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதி விலைகள் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் போது உலக மசகெண்ணெய் விலைகளை பொதுவாக பின்பற்றியிருந்தன. அதற்கமைய, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சராசரி இறக்குமதி விலையானது பீப்பாயொன்றுக்கு 2017இன் அதேகாலப்பகுதியிலிருந்த ஐ.அ.டொலர் 54.81 சராசரி இறக்குமதி விலையுடன் ஒப்பிடுகையில் 2018 முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொலர் 77.54 ஆக 41.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

வரைபடம் 3.1

பன்னாட்டுச் சந்தையில் மசகு எண்ணெயின் (பிரன்ட்) சராசரி விலை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய்க்கான இறக்குமதி விலை




*மூலங்கள்:* புளும்பேர்க்
இலங்கை மத்திய வங்கி

- **2018 காலப்பகுதியின் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சில்லறைப் பெற்றோலிய விலைகள் பல தடவைகள் சீர்செய்யப்பட்டன.** உலக எரிபொருள் சந்தைகளில் உயர்வடைகின்ற விலைகள், ஐ.அ.டொலரின் பரந்த அடிப்படையிலான வலுப்படுத்தல் என்பவற்றுடன் இணைந்தான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகரிக்கும் நிதியியல் நட்டங்கள் மற்றும் படுகடன் மட்டங்கள் என்பன இவ்விலைத்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலில் கரிசனையை ஏற்படுத்தியுள்ளன. அதற்கமைய 2018 மே மாதத்தின் ஆரம்பத்தில் பெற்றோல், டீசல், மற்றும் மண்ணெண்ணெய் உற்பத்திகளுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சில்லறை விலைகள் அதிகரித்ததுடன் கிரமமான திருத்தக் கொள்கை தற்போது நடைமுறையிலுள்ளது. எனினும், குறைந்த வருமான வீட்டலகுகள் மற்றும் கடற்றொழில் துறை என்பவற்றின் மீதான உயர்வான மண்ணெண்ணை விலைகளின் சுமையினை கருத்திற்கொண்டு அரசாங்கம் 2018 யூன் 13 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் மண்ணெண்ணெய் விலையை லீற்றருக்கு ரூ. 70 ஆகக் குறைத்ததுடன் விலையானது தொடர்ந்தும் அதேமட்டத்தில் பேணப்படுகின்றது. மேல்நோக்கிய விலைத்திருத்தங்களின் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கிசைவாக அதன் சில்லறைப் பெற்றோலிய விலைகளை அதிகரித்திருந்தது. உள்நாட்டு சந்தையில் ஒட்டுமொத்த பெற்றோலிய விற்பனைகளின் வளர்ச்சியானது 2018இன் முதல் எட்டு மாதகாலத்தின் போது மிதமாகக் காணப்பட்டது.

- **போக்குவரத்துத் துறைக்கான டீசல் விற்பனைகளின் வீழ்ச்சி மற்றும் அதிகரித்த நீர்மின்வலு உருவாக்கத்தின் காரணமாக எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட**

### அட்டவணை 3.1
### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சில்லறை வர்த்தக பெற்றொலிய விலைகளிலான அண்மைய திருத்தங்கள்

| உற்பத்தி | 11.05.18 இற்கு முன்னரான விலைகள் | 11.05.2018 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகைகளிலான விலைகள் | 11.10.2018 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகைகளிலானி திருத்தங்கள் | 11.08.2018 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகைகளிலான திருத்தங்கள் | 11.09.2018 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகைகளிலான திருத்தங்கள் | 11.10.2018 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகைகளிலான திருத்தங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 92 ஒக்டேன் பெற்றோல் | 117.00 | 137.00 | 145.00 | சீ.இ | 149.00 | 155.00 |
| 95 ஒக்டேன் பெற்றோல் | 128.00 | 148.00 | 155.00 | 157.00 | 161.00 | 169.00 |
| தன்னியக்க டீசல் | 95.00 | 109.00 | 118.00 | சீ.இ | 123.00 | சீ.இ |
| சிறப்பு டீசல் | 110.00 | 119.00 | 129.00 | 130.00 | 133.00 | 141.00 |
| மண்ணெண்ணெய் | 44.00 | 101.00 | 70.00<br>(13.06.18 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில்) | சீ.இ | சீ.இ | சீ.இ |
| கைத்தொழிலுக்கான மண்ணெண்ணெய் | 88.00 | 110.00 | சீ.இ | சீ.இ | சீ.இ | சீ.இ |

சீ.இ - சீராக்கம் இடம்பெறவில்லை

*மூலம்:* இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

3

**வலு உற்பத்தி குறைவடைந்தமைக்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு டீசல் விற்பனை 8.6 சதவீதத்தினால் குறைவடைந்தது.** மேலும், வலு உற்பத்தித் துறையிலிருந்தான குறைவான கேள்வியின் காரணமாக 2018இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியின் போது எரிபொருள் எண்ணெய் விற்பனை 2.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், உள்நாட்டுப் பெற்றோல் விற்பனையானது போக்குவரத்துத் துறையிலிருந்து தோன்றிய உயர்வான கேள்வியின் மூலம் தூண்டப்பட்டு 2018இன் முதல் எட்டு மாதகாலத்தின் போது 7.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேகாலப்பகுதியின் போது மண்ணெண்ணை விற்பனை 30.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.


## மின்வலு

- **மொத்த மின்வலு உற்பத்தியானது 2018இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் உற்பத்திசெய்யப்பட்ட 8,488 கி.வா.ம உடன் ஒப்பிடுகையில் 8,800 கி.வா.ம ஆக 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.** 2018இன் மேமாத காலப்பகுதியின் போது கிடைக்கப்பெற்ற கடுமையான மழைவீழ்ச்சி மற்றும் அதன் பின்னர் நீரேந்துப் பிரதேசங்களில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள் என்பன உயர்வான நீர் மின்வலு உற்பத்திக்கு துணையளித்ததுடன் அனல் மின்வலு உற்பத்தி மீது தங்கியிருப்பதனை ஓரளவிற்குக் குறைத்தது. அதற்கமைய, சிறிய நீர்மின் வலு நீங்கலாக நீர்மின் வலு உற்பத்தியானது 2018இன் முதல் ஏழுமாதங்களின் போது 2017இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 99.5 சதவீத்தினால் அதிகரித்தது. அதேவேளை, நாட்டில் மொத்த எரிபொருள் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட வலு உற்பத்தி 22.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நுரைச்சோலை நிலக்கரி வலு பொறித்தொகுதியின் பல பொறித்தொகுதி செயலிழப்புகளின் காரணமாக நிலக்கரி வலு உற்பத்தியும் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதல் ஏழுமாத காலப்பகுதியில் 13.5 சதவீதத்தினால் குறைவடைந்தது. அதேவேளை, அதிகரிக்கப்பட்ட சிறு நீர்மின் வலு உற்பத்தி மற்றும் சூரிய வலு உற்பத்தி என்பவற்றின் காரணமாக மரபுசாரா மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி ஊடான வலு உற்பத்தி 2018இன் முதல் ஏழு மாதங்களில் 2017இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 37.2 சதவீதத்தினால் அதிகரித்தது. நாட்டின் மொத்த வலு உற்பத்தியில் இலங்கை மின்சார சபை 75.6 சதவீதத்திற்கு வகைகூறிய அதேவேளை எஞ்சிய அளவினை சுயாதீன வலு உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்திருந்தனர். மின்சார விற்பனைகள் 2018இன் முதலரைக் காலப்பகுதியின் போது 2017இன் தொடர்புடைய காலப்பகுதிக்கான 5.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மின்சார விற்பனைகளின் அதிகரிப்பானது குறிப்பாக கைத்தொழில், பொதுநோக்கு மற்றும் வீட்டுத்துறைகள் என்பவற்றினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்ததுடன் அவை 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 5.1 சதவீதம், 4.6 சதவீதம் மற்றும் 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.

- **அரசாங்கமானது இலங்கை மின்சார சபை மற்றும் தனியார் துறை என்பவற்றுடன் கூட்டிணைந்து மீள்புதுப்பிக்கத்தக்க மற்றும் மீள்புதுப்பிக்கமுடியாத மூலங்கள் ஊடாகவும் பொருத்தப்பட்ட உற்பத்தி இயலளவினை அதிகரிப்பதற்காக பல்வேறுபட்ட வழிமுறைகளை தற்போது எடுத்துவருகின்றது.** தேசிய மின் தொகுதிக்கு 25 மெகா வாற்று சக்தியினைச் சேர்க்கின்ற மொறகஹகந்த நீர் மின் வலுப் பொறித்தொகுதியின் நிர்மாணம் 2018 முதலரைப் பகுதியின் போது நிறைவுபெற்றது. உமா ஓயா மற்றும் புறோட்லான்ட் நீர் மின் வலுப் பொறித்தொகுதிகள் 2019இல் ஆரம்பிக்கப்படவுள்ள அதேவேளை தள்பிட்டிகல நீர் மின் வலு பொறித்தொகுதி 2020 அளவில் நிறைவுபெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், ஜின்கங்கை, மொறகொல்ல மற்றும் சீதாவாக்க வலுப் பொறித் தொகுதிகள் என்பன 2022ஆம் ஆண்டளவில் நிறைவு பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. அதேவேளை, “சூரிய பல சங்கிரமய” நிகழ்ச்சித்திட்டம் 2018 யூன் இறுதியளவில் தேசிய மின்தொகுதிக்கு 65 மெகா வாற்று வலுவினைச் சேர்த்துள்ளதுடன்

**வரைபடம் 3.2**

**மின்வலு உருவாக்கம் மற்றும் விற்பனைக் கலவை (அ)**




(அ) மொத்த வலு உருவாக்கத்திற்குள்ளான பங்கினை சதவீதம் காட்டுகின்றது
(ஆ) பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க வலுவானது சிறிய நீர்மின், சூரியசக்தி, காற்று மற்றும் உயர் திணிவு என்பவற்றை உள்ளடக்குகின்றது
(இ) மதத்தளங்கள், அரசாங்கம், உணவகங்கள் மற்றும் வீதி விளக்குகள் துறைகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது


மூலம்: இலங்கை மின்சார சபை

2019 அளவில் மின்தொகுதிக்கு மேலும் 70 மெகா வாற்று சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இலங்கை மின்சார சபையின் முதலாவது 100 மெகா வாற்று தேவையை வழங்கவுள்ள காற்று வலுப் பூங்கா 2020இல் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அதேவேளை 275 மெகா வாற்று கொள்ளவு கொண்ட மற்றுமொரு காற்று மின் வலுப் பொறித்தொகுதியொன்று கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. மீள்புதுப்பிக்க முடியாத சக்தி நியதிகளைப் பொறுத்தமட்டில், தெற்குப் பிராந்தியத்தில் 100 மெகா வாற்று மிதக்கும் பொறித்தொகுதியொன்று 2019இல் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் மூன்று 35 மெகா வாற்று எரிவாயு சுழலி பொறித்தொகுதிகள் 2019 மற்றும் 2020ஆம் ஆண்டளவில் களனி திஸ்ஸ மின் நிலையத்தில் பொருத்தப்படவுள்ளது.

- **இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2018 - 2037 காலப்பகுதிக்கான அடிப்படை விடய குறைந்த செலவிலான நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்திற்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நிபந்தனையுடனான அனுமதியொன்றினை 2018 யூனில் வழங்கியது.** 2030ஆம் ஆண்டளவில் 30 சதவீதம் கொண்ட திரவ இயற்கை வாயு, 30 சதவீத கொண்ட உயர் வினைத்திறன் நிலக்கரி, 25 சதவீதமான பாரியளவு நீர் மின் வலு மற்றும் 15 சதவீத கொண்ட உலை எண்ணெய் மற்றும் மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் போன்ற சக்திக் கலப்புத் தொகுப்பொன்றினை எடுத்துரைக்கின்ற மின்வலு உற்பத்திக் கலப்பு தொடர்பான புதிய தேசியக் கொள்கையொன்றிற்கு 2018 மே மாதத்தில் அமைச்சரவை அனுமதியை வழங்கியிருந்தது. மேலும், "அரசாங்கத்திற்கான அரசாங்கம்" என்ற திரவமாக்கப்பட்ட

வரைபடம் 3.3

புதிய மின்வலு இணைப்புக்கள்




*மூலம்:* இலங்கை மின்சார சபை

இயற்கைவாயு மின் பொறித்தொகுதிகளை செய்வதற்கான அனுமதியையும் அமைச்சரவை வழங்கியிருந்தது. மின்வலு உற்பத்திக் கலப்பு தொடர்பில் புதிய தேசியக் கொள்கை, முன்னர் அனுமதிக்கப்பட்ட அடிப்படை விடய குறைந்த செலவிலான நீண்டகால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்திற்கு எதிராக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் "அரசாங்கத்திற்கான அரசாங்கம்" பேச்சுவார்த்தைகள் அடிப்படையின் மீதான இயற்கை வாயு மின்வலுப் பொறித்தொகுதிகளின் 1,400 மெகா வாற்றினை உற்பத்திசெய்வதற்கான திட்டங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டு, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை விடய குறைந்த செலவிலான நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தினை யூன் மாதத்தில் அனுமதித்திருந்தது. புதிதாக அனுமதிக்கப்பட்ட அடிப்படை விடய குறைந்த செலவிலான நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டத்திற்கமைவாக பொருத்தப்பட்ட கொள்ளளவானது நிலக்கரி வலுவின் 2,700 மெகா வாற்று, இயற்கை வாயு 1,500 மெகா வாற்று, சூரிய வலு 1,389 மெகா வாற்று, காற்று வலு 1,205 மெகா வாற்று, பிரதான நீர் மின் வலு 842 மெகா வாற்று, உலை எண்ணெய் வலு 320 மெகா வாற்று, சிறிய நீர் மின் வலு 215 மெகா வாற்று, எரிவாயு சூழலி வலு 105 மெகா வாற்று, உயிர் திணிவு வலு 85 மெகா வாற்று கொண்ட சக்தியினை அடுத்துவரும் 20 ஆண்டு காலப்பகுதியினுள் மின்வலு உற்பத்தி முறைமைக்கு சேர்ப்பதன் மூலம் விரிவுபடுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## வீதி அபிவிருத்தி

- **2018இன் முதலரையாண்டின் போது வீதி அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன**. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 2018இன் முதலரைப்பகுதியின் போது விரைவுப் பாதைகள் மற்றும் பெருந்தெருக்களை பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், வீதிகளை அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல், பாலங்கள் மற்றும் மேம்பாலங்களை நிருமாணித்தல் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வீதிகளை புனரமைத்தல் என்பவற்றுக்காக 2017இன் தொடர்புடைய காலப்பகுதியில் உறப்பட்ட ரூ.48.8 பில்லியன் செலவினத்துடன் ஒப்பிடுகையில் ரூ.58.5 பில்லியன் தொகையினை செலவிட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 2018இன் முதலரையாண்டு காலப்பகுதியில் விரைவுப் பாதைகள் உள்ளடங்கலாக 12,380 கி.மீ மொத்த நீளம் கொண்ட தேசிய பெருந்தெருக்களையும் 4,662 பாலங்களையும் பராமரிப்புச் செய்தது. வீதி வலையமைப்பை மேம்படுத்துவதற்கு கொண்டு நடாத்தப்பட்ட செயற்றிட்டங்கள், வடக்கு பாதை இணைப்பு செயற்றிட்டத்தின் கீழ் கண்டி-யாழ்ப்பாணப் பாதை புனரமைத்தலையும் மேம்படுத்தலையும் உள்ளடக்கியிருந்தன. அதேவேளை, முன்னுரிமை வீதிகள் செயற்றிட்டம் 3 - கட்டம் II இன்கீழ் 16 வீதிகளின் புனரமைப்பு இக்காலப்பகுதியின் போது நிறைவுசெய்யப்பட்டது. இக்காலப்பகுதியின் போது கொழும்பு தேசிய பெருந்தெருக்கள் செயற்றிட்டமும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை "மக நெகும" கிராமிய வீதி மீளெழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தமாக 122 கி.மீற்றர் புனரமைப்புச் செய்யப்பட்டன. மேலும், துறைமுக நுழைவிற்கான பெருந்தெரு செயற்றிட்டத்தின் விரிவான வடிவமைப்புக்கான ஆலோசனை 2018 பெப்புருவரியில் நிறைவுசெய்யப்பட்டது.

- **நாட்டின் விரைவுப்பாதை வலையமைப்பின் விரிவுபடுத்தலும் ஆண்டின் முதலரைப் பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது**. மாத்தளைக்கான இணைப்பை உள்ளடக்கிய மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டைக்கான தெற்கு விரைவுப் பாதையின் விரிவுபடுத்தல் 2018இன் முதலரைப்பகுதியின் போது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன் 2019இன் ஒத்தோபர் மாதமளவில் நிறைவுசெய்யப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, பொத்துஹெர - கலகெதற மற்றும் மீரிகம-அம்பேபுஸ்ஸ போன்றவற்றின் இணைப்புகளுடன் கடவத்தையிலிருந்து தம்புள்ளைக்கான மத்திய விரைவுப் பாதையின் நிருமாணப் பணிகளுக்கு அரசாங்கம் அதிக முன்னுரிமை வழங்கியுள்ளது. இச்செயற்றிட்டத்தின் மொத்த நீளம் 169 கி.மீற்றர் ஆவதுடன் தற்போது அதற்கான காணி கையகப்படுத்தல், காணி மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோன்று கொழும்பு-கட்டுநாயக்கா விரைவுப்பாதைக்கான இணைப்புடன் கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிக்கான வெளிச்சுற்று வட்டப் பாதையின் IIIஆம் கட்ட நிருமாணப் பணிகள் 2018இன் யூன் மாத இறுதியளவில் சிவில் பணிகளின் கிட்டத்தட்ட 63 சதவீதம் கொண்ட திரண்ட பௌதீக முன்னேற்றத்துடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. 2018இன் யூன் மாதத்தில் வெளிச் சுற்று வட்டப் பாதையினைப் பூர்த்திசெய்தலானது கொழும்பு பெருநகர்ப் பிராந்தியத்தினுள் காணப்படும் போக்குவரத்து நெரிசலை கணிசமானளவு குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

3

### வீதிப் பயணிகள் போக்குவரத்து

- **2018இன் முதலரையாண்டின் போது வீதிப் பயணிகள் போக்குவரத்து குறைவான செயலாற்றமொன்றினைக் காட்டியிருந்தது.** இலங்கை போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகள் பயணிகள் கி.மீற்றர்கள் மற்றும் தொழிற்படுத்தப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை போன்ற நியதிகளில் வீழ்ச்சி ஒன்றினைக் காண்பித்திருந்தது. எனினும், இலங்கை போக்குவரத்துச் சபையினால் தொழிற்படுத்தப்பட்ட கி.மீற்றர்கள் சிறியளவு அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, தனியார் பேருந்துத் தொழிற்படுத்துநர்களின் பயணிகள் கி.மீற்றர் தூரமும் தொழிற்படுத்தப்பட்ட கிலோ மீற்றர் தூரமும் இக்காலப்பகுதியின் போது அதிகரித்தன. தனியார் பேருந்துத் தொழிற்படுத்துநர்களின் மாகாணங்களுக்கு இடையிலான மற்றும் மாகாணத்திற்குள்ளான அனுமதிப் பத்திரங்கள் 2018இன் யூன் மாதத்தின் இறுதியளவில் முறையே 3,164 மற்றும் 16,924 ஆகக் காணப்பட்டன. அதேவேளை, உள்நாட்டு எரிபொருள் விலைகளின் மேல்நோக்கிய திருத்தத்திற்கிணங்க அரசாங்க மற்றும் தனியார் பேருந்து தொழிற்பாடுகள் ஆகிய இரண்டினதும் கட்டணங்கள் 2018 மே 23 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆரம்பத்தில் திருத்தப்பட்டன. அதற்கமைய, குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் ரூ10 இலிருந்து ரூ.12 ஆக அதிகரித்ததுடன் ஏனைய கட்டணங்கள் 12.5 சதவீத சராசரி வீதமொன்றின் மூலம் மேல்நோக்கி திருத்தப்பட்டன. உள்நாட்டுச் சந்தையில் அதிகரிக்கின்ற எரிபொருள் விலைகளைப் பரிசீலனையில் கொண்டு, 2018 செத்தெம்பர் 21 தொடக்கம் செயற்படும் விதத்தில் பேருந்துக் கட்டணங்கள் மேலும் 4 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட அதேவேளை குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் மாற்றம் செய்யப்படாதிருந்தது.

- **தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவானது 2018இன் முதலரைப் பகுதியில் வீதிப் பயணிகள் போக்குவரத்து செயற்பரப்பினை மேம்படுத்துவதற்காக தொடர்ந்தும் வழிமுறைகளை எடுத்திருந்தது.** 2018இன் முதலரைப் பகுதியில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முப்பத்திரெண்டு புதிய "சிசுசெரிய" சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் மொத்தமாக 1,405 பேருந்துகள் தொழிற்பட்டன. சாதாரண பேருந்துக் கட்டணங்களின் ஐம்பது சதவீத சலுகை வீதத்தில் பாடசாலை மாணவர்களுக்காக பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட இப்பேருந்து சேவை காலை மற்றும் மாலை நேரங்களிலான உச்ச மணித்தியாலங்களின் போது வீதிகளில் கடுமையான போக்குவரத்து நெரிசலை குறைக்கும் அதேவேளை பயணத்தின் பாதுகாப்பினையும் நம்பகத்தன்மையினையும் உறுதிசெய்யும் நோக்குடன் கொண்டு நடாத்தப்பட்டது. அதேவேளை, தமது நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு நகரங்களுக்குப் பயணிக்கின்ற கிராமியப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்காக இடைத்தடங்கலற்ற, சிக்கனமான மற்றும் நம்பகமான போக்குவரத்தினை வழங்குவதற்கு 2018இன் முதலரைப் பகுதியின் போது 10 புதிய "கெமிசெரிய" பேருந்து சேவைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. "நிசிசெரிய" செயற்றிட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டின் போது 100 புதிய பேருந்து சேவைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதுடன் ஆண்டின் முதலரைப் பகுதியின் போது 24 புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக 154 "நிசிசெரிய" சேவைகள் 2018இன் யூன் இறுதியளவில் தொழிற்பட்டிருந்தன.

அட்டவணை 3.2

வீதிப் பயணிகள் போக்குவரத்துத் துறையின் செயலாற்றம்

| விடயம் | 2017 சன - யூன் | 2018 சன - யூன் (அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| **இலங்கை போக்குவரத்துச் சபை** | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 219 | 220 | 0.1 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்)) | 7,709 | 7,582 | -1.6 |
| சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை | 7,608 | 7,308 | -3.9 |
| தொழிற்பட்ட பேருந்துகளின் சராசரி எண்ணிக்கை | 5,219 | 5,211 | -0.2 |
| **தனியார் துறை** | | | |
| தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (மில்லியன்) | 523 | 554 | 5.9 |
| பயணிகள் கிலோ மீற்றர்கள் (மில்லியன்)) | 26,346 | 27,668 | 5.0 |
| சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை | 19,917 | 20,088 | 0.9 |
| தொழிற்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | 17,728 | 19,165 | 8.1 |
| வழங்கப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 3,210 | 3,164 | -1.4 |
| வழங்கப்பட்ட மாகாணங்களுக்கு வெளியேயான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 16,707 | 16,924 | 1.3 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை போக்குவரத்து சபை
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

- **2018 முதல் ஒன்பது மாதங்களின் போது புதிய ஊர்திகளின் பதிவு முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தது.** 2018இன் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியின் போது மொத்த ஊர்திகளின் எண்ணிக்கை 2017இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9.0 சதவீதத்தினால் அதிகரித்தது. பதிவுசெய்யப்பட்ட ஊர்திகளின் அதிகரிப்பானது பிரதானமாக மோட்டார் கார்கள், பேருந்துகள், இரட்டை நோக்கு ஊர்திகள் மற்றும் உந்து ஊர்திகள் போன்றவற்றில் அவதானிக்கப்பட்டது. எனினும், நில ஊர்திகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து ஊர்திகள் என்பவற்றின் பதிவு வீழ்ச்சியடைந்தது. 2018ஆம் ஆண்டிற்கான

அட்டவணை 3.3

உந்து ஊர்திகளின் புதிய பதிவு

| விடயம் | 2017 Jan - Sep | 2018 Jan - Sep (a) | Change % |
|---|---|---|---|
| பேருந்துகள் | 2,356 | 2,383 | 1.1 |
| தனியார் மோட்டார் வாகனங்கள் | 29,684 | 63,863 | 115.1 |
| முச்சக்கர வாகனங்கள | 17,519 | 15,118 | -13.7 |
| இரட்டை நோக்கங்களுக்கான ஊர்திகள் | 12,613 | 13,302 | 5.5 |
| ஊந்து ஈருருளிகள் | 262,012 | 263,004 | 0.4 |
| சரக்கு கொண்டு செல்வதற்கான ஊர்திகள் | 8,503 | 7,522 | -11.5 |
| நில ஊர்திகள் | 9,528 | 7,187 | -24.6 |
| நான்கு சில்லு வண்டி மற்றும் மோட்டார் மனை | - | 654 | - |
| மொத்தம் | 342,215 | 373,033 | 9.0 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களம்

அட்டவணை 3.4

**இலங்கை புகையிரதத்தின் செயலாற்றம்**

| விடயம் | 2017 சன-யூன் | 2018 சன-யூன் (அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| செயற்படுத்தப்பட்ட கிலோமீற்றர் (மில்) | 5.9 | 5.9 | -0.8 |
| பயணிகள் கிலோமீற்றர் (மில்) | 3,639 | 3,738 | 2.7 |
| கப்பற்தொன் கிலோமீற்றர் (மில்) | 70.6 | 63.5 | -10.2 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை புகையிரதம்

வரவுசெலவுத் திட்டத்தில் சிறிய இயந்திர கொள்ளளவு கொண்ட ஊர்திகள் மற்றும் சூழல் நட்புமிக்க ஊர்திகள் இறக்குமதி தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்ட சாதகமான தீர்வைக் கட்டமைப்பானது சிறிய இயந்திர கொள்ளளவு ஊர்திகள் கலப்பு மற்றும் மின் ஊர்திகள் இறக்குமதியில் அதிகரிப்பொன்றினை ஏற்படுத்தியது. எனினும், ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியின் போது வர்த்தக ரீதியற்ற நோக்கங்களுக்காகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஊர்தி இறக்குமதிகளின் மிதமிஞ்சிய வளர்ச்சியினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கமும் மத்திய வங்கியும் பல்வேறுபட்ட வழிமுறைகளை எடுத்திருந்தது.

## புகையிரதப் போக்குவரத்து

- **புகையிரதப் போக்குவரத்தானது 2018இன் முதலரைப் பகுதியின் போது பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளில் விரிவாக்கம் ஒன்றினைப் பதிவுசெய்தது.** புகையிரதப் பயணிகள் கி.மீற்றர் தூரம் 3.7 பில்லியன் கீ.மீற்றருக்கு 2.7 சதவீதத்தினால் அதிகரித்தது. புகையிரதப் பெட்டிகள், புகையிரதப் பாதை தொடர்பான தொடர்ச்சியான பராமரித்தல் மற்றும் புகையிரத உட்கட்டமைப்பிற்கான மேம்படுத்தல்கள் என்பன இச்சிறிய விரிவுபடுத்தலுக்குப் பங்களித்திருந்தன. எனினும், சரக்கு கி.மீற்றர் தூரம் 63.5 மில்லியன் மெ.தொன் கி.மீற்றரைப் பதிவுசெய்து 10.2 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது.

- **வினைத்திறன் மிக்க போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் நோக்கில் புகையிரத உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட வழிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன.** ஆண்டின் முதலரைப் பகுதியின் போது இலங்கைப் புகையிரதமானது புகையிரத நிலையக் கட்டடங்கள், பாலங்கள், சமிக்ஞைகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் முறைமைகள் போன்றவற்றினை தொடர்ந்தும் நிருமாணித்துப் பராமரித்திருந்தது. இதற்கு மேலதிகமாக, கட்டுநாயக்காவிலிருந்து நீர்கொழும்பிற்கான இரட்டைப் புகையிரதப் பாதை அமைத்தல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன் கண்டி - பேராதனை - கடுகன்னாவப் பிரிவின் புனரமைப்புப் பணிகள் மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்டன. மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் கொழும்பு புறநகர் புகையிரதச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய ஆரம்பப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் மாகோ தொடக்கம் ஓமந்தை வரையான புகையிரதப் பாதை புனரமைப்புடன் தொடர்புடைய ஆரம்பப் பணியும், பொல்ஹாவெல தொடக்கம் குருநாகல் வரையான இரட்டைப் புகையிரதப் பாதை அமைத்தல் ஆரம்பப் பணியும் 2018இன் முதலரைப்பகுதியின் போது நிறைவுசெய்யப்பட்டன. அதேவேளை, காணி முகாமைத்துவச் செயன்முறையை அதிகரிக்கும் பொருட்டு புகையிரதக் காணிகள் தொடர்பில் நில அளவீடு மற்றும் மதிப்பீடு என்பனவற்றை இலங்கைப் புகையிரதம் ஆரம்பித்திருந்தது. அதேவேளை, இலங்கைப் புகையிரதம் 2016இல் ஆரம்பிக்கப்பட்ட களனி பள்ளத்தாக்கு புகையிரதப்பாதையினை மேம்படுத்தவதற்கான செயற்றிட்டத்தையும் தொடர்ந்தும் மேற்கொண்டிருந்தது.

## வான்வழிப் போக்குவரத்து

- **பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து என்பன தொடர்பில் வான்வழிப் போக்குவரத்து துறையானது முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப் பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** இது சுற்றுலாப் பயணிகளின் வருகையின் தொடர்ச்சியான அதிகரிப்பினால் ஆதரவு அளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் மாறிச்செல்லும் பயணிகள் உள்ளடங்கலாக மொத்தப் பயணிகள் போக்குவரத்தானது ஆண்டின் முதலரைப் பகுதியின் போது 6.4 மில்லியன் பயணிகளிற்கு 24.3 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் கையாளப்பட்ட மொத்தச் சரக்குகளின் அளவு இக்காலப்பகுதியின் போது 10 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், 2018இன் முதல் ஆறு மாதங்களின் போது பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் மொத்த வானூர்திகளின் போக்குவரத்து 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 35,908இற்கு 19.4 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், 2017இல் பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய ஓடுதளம் பகுதியளவில் மூடப்பட்ட போது பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்திநிலையத்திலிருந்து மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்திநிலையத்திற்கு வானூர்திகள் திசைமாற்றப்பட்டதன் காரணமாக மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்தி நிலையமானது 2017இன் முதலரைப்பகுதியின் 980 உயர் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியின் போது 281 வானூர்திப் போக்குவரத்துகளை மாத்திரம் கையாண்டது. அதே சந்தர்ப்பத்தில் மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் பயணிகள் போக்குவரத்து 96.6 சதவீதத்தினால் கணிசமாக குறைவடைந்தது. உள்நாட்டு சேவைகளுடன் தொடர்புபட்ட பயணிகள் போக்குவரத்து 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப் பகுதியில் 28.1 சதவீதத்தினால் அதிகரித்தது.


- **2018இன் முதலரைப்பகுதியில் வானூர்திநிலைய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.** பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய விரிவுபடுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் 2018இன் முதலரைப்பகுதியின் போது தூர சுற்றுவட்டப் பிரதேசமும் வாடகை வண்டி வீதிகளும் நிருமாணிக்கப்பட்டதுடன் 2019 ஒத்தோபர் மாதமளவில் நிறைவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும் மத்தள ராஜபக்ஷ பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் சிறந்த பயன்பாட்டிற்காக வானூர்தி நிலையத்தினை முகாமை செய்வதற்கு இணைந்த கூட்டுமுயற்சியொன்றினை ஆரம்பிப்பதற்கான இந்திய வானூர்திநிலைய அதிகார சபையுடன் தற்போது பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கைக்கான சிவில் விமானத் துறைக் கொள்கைக்கான அனுமதியினை அமைச்சரவை வழங்கியுள்ளதுடன் பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. சிவில் விமானத்துறைக் கொள்கை இலங்கையின் விமானத் தொழிற்துறையினுள் அனைத்து நடவடிக்கைக்கும் வலுவான சட்டப் பின்னணியொன்றினை வழங்கும். மேலும், 2018இன் முதலரைப் பகுதியின் போது இரத்மலான வானூர்திநிலையத்தினை அபிவிருத்தி செய்வதற்கான முதன்மைத் திட்டமொன்றுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. இது நிலத்திட்டங்களையும் அதேபோன்று வர்த்தக வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கான வியாபாரத் திட்டமொன்றினையும் உள்ளடக்குகின்றது. மேலும், மட்டக்களப்பு வானூர்திநிலையம் சிவில் வானூர்திப் போக்குவரத்துத் தொழிற்பாடுகளுக்காக 2018 மாச்சில் மீளத் திறக்கப்பட்டது.

### துறைமுகப் பணிகள்

- **2018இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் துறைமுக நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த செயலாற்றம் கொழும்புத் துறைமுகத்தின் அனைத்து கொள்கலன் முனையங்களிலும் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளின் வளர்ச்சியினைப் பிரதிபலித்து முன்னேற்றமடைந்திருந்தது.** 2018இன் முதல் ஒன்பது மாதங்களில் கொள்கலன், மாற்றி ஏற்றுதல் மற்றும் சரக்கு கையாளல் போன்றவை தொடர்பில் கொழும்புத் துறைமுகத்தின் ஒட்டுமொத்த செயலாற்றம் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 14.9 சதவீதம், 19.4 சதவீதம் மற்றும் 13.3 சதவீதம் வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைக்கோடி மற்றும் தெற்காசிய கேட்வேய் முனைக்கோடி ஆகியவற்றில் கையாளப்பட்ட மொத்த கொள்கலன்கள் 2018இன் முதல் ஒன்பது மாதங்களின் போது முறையே 13.2 சதவீதம் மற்றும் 16.5 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அதற்கமைய, கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைக்கோடி, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் தெற்காசிய கேட்வேய் முனைக்கோடி என்பன கொழும்புத் துறைமுகத்தினுள் கையாளப்பட்ட மொத்த கொள்கலன்களில் முறையே 37.8 சதவீதம், 32.5 சதவீதம் மற்றும் 29.7 சதவீதத்திற்கு வகைகூறின. அதேவேளை, கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைக்கோடி, தெற்காசிய கேட்வேய் முனைக்கோடி மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பவற்றில் கையாளப்பட்ட மாற்றிஏற்றுதல் கொள்கலன்கள் 2018இன் முதல் ஒன்பது மாதங்களில் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 14.6 சதவீதம், 21.1 சதவீதம் மற்றும் 23.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

- **2017 யூலையில் அரசாங்க தனியார் பங்குடமை அடிப்படையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தினை அபிவிருத்தி செய்து தொழிற்படுத்துவதற்காக சைனா மேர்சன்ட் போர்ட் கோல்டிங் கம்பனியுடன் சலுகை ஒப்பந்தமொன்றினை இலங்கை துறைமுக அதிகார சபையும் அரசாங்கமும் கைச்சாத்திட்டதன் பின்னர் 2018இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியின் போது அம்பாந்தோட்டைத் துறைமுகம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** 2018இன் முதல் ஒன்பது மாதங்களின் போது சரக்கு இறக்குதல், சரக்கு ஏற்றுதல் மற்றும் சரக்கு கையாளல் என்பன 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 82.8 சதவீதம், 156.1 சதவீதம் மற்றும் 102.6 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் மொத்த வாகனக் கையாளுகையானது உள்நாட்டு மற்றும் மாற்றிஏற்றுதல் வாகனக் கையாளுகையில் முறையே 115.7 சதவீதம் 88.6 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்ததன் மூலம் துணையளிக்கப்பட்டு கடந்த ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதிக்கெதிராக 2018இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியின் போது 98.8 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது.

வரைபடம் 3.4
இலங்கை துறைமுகங்களில் கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் மற்றும் சரக்குக் கையாளல்




*மூலங்கள்:* இலங்கை துறைமுக அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி


### அட்டவணை 3.5
### கப்பற் பணிகளின் செயலாற்றம்

| விடயம் | 2017 சன-செத் | 2018 சன-செத் (அ) | மாற்றம் % |
|---|---|---|---|
| இலங்கை துறைமுகத்திற்கு வருகைதந்த கப்பல்கள் | 3,647 | 3,716 | 1.9 |
| கையாளப்பட்ட மொத்த சரக்கு (மெ.தொ '000 ) | 69,337 | 77,949 | 12.4 |
| கையாளப்பட்ட மொத்த கொள்கலன்கள் (இ.ச.அ. '000) (ஆ) | 4,545 | 5,223 | 14.9 |
| மாற்றி கப்பலேற்றுதல் (இ.ச.அ '000) (ஆ) | 3,523 | 4,207 | 19.4 |

(அ) தற்காலிகமானது
(ஆ) இ.ச.அ இருபது அடிக்குச் சமனான கொள்கலன் அலகுகள்

*மூலம்:* இலங்கை துறைமுக அதிகாரசபை

### வரைபடம் 3.5
### தொலைபேசி இணைப்புக்கள் (பொருத்தப்பட்ட மற்றும் கையடக்க தொலைபேசி) மற்றும் இணைய இணைப்புக்கள்




*மூலங்கள்:* இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு
இலங்கை மத்திய வங்கி

- **கடல் போக்குவரத்தின் ஊடாக இணைப்பினை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கைத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு 2018இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியின் போது பல வழிமுறைகள் பொறுப்பேற்கப்பட்டிருந்தன.** 2018இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியின் போது கிழக்குக் கொள்கலன் முனையத்தின் அபிவிருத்தி தொடர்ந்தும் இடம்பெற்றதுடன் இது துறைமேடைச் சுவர் நிறைவுபெற்றதனையும் உள்ளடக்குகின்றது. கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை உள்ளடக்குகின்ற தேசிய துறைமுக பெரும்பாகத் திட்டமொன்று பன்னாட்டு ஆலோசகர்களின் தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் 2018இன் முதல் அரையாண்டுப்பகுதியில் காலித் துறைமுகத்தில் கடல்சார் உல்லாசப் படகு செயற்றிட்ட முன்மொழிவுக்கான கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை, ஜெயா கொள்களன் முனைக்கோடி, பிறின்ஸ் விஜய துறைமுக மேடை மற்றும் பண்டாரநாயக்கா துறைமுக மேடை என்பவற்றில் நாளாந்த கொள்கலன் தொழிற்பாடுகள் நிறுத்தப்படுவதனைத் தவிர்ப்பதற்கு கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் களஞ்சியப் பிரதேசம் மற்றும் வீதிகள் புனரமைத்தல் என்பன கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டன.

## தொலைத்தொடர்பூட்டல் பணிகள்

- **2018இன் முதலரைப் பகுதியின் தொலைத்தொடர்பூட்டல் தொழிற்துறையானது செல்லிடத் தொலைபேசி மற்றும் இணையத்தள இணைப்புகள் என்பவற்றின் அதிகரிப்பின் மூலம் பாரியளவில் துணையளிக்கப்பட்டு அதன் வளர்ச்சியினை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது.** செல்லிடத் தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கை 2018இன் முதலரைப் பகுதியின் போது 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 7.5 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பி தொலைபேசி இணைப்புகள் 1.5 வீத குறைவான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. 2018இன் முதலரைப் பகுதியின் போது நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பிவழி தொலைபேசி இணைப்புக்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. 2018 யூன் இறுதியளவில் நிலையான தொலைபேசி நுழைவு (100 ஆட்களுக்கான இணைப்புக்கள்) மற்றும் செல்லிட தொலைபேசி நுழைவுகள் என்பன முறையே 11.7 மற்றும் 139.5 ஆக காணப்பட்டன. இணையத்தளப் பணிகள் தொடர்பில், 2018 யூனில் முடிவடைகின்ற பன்னிரண்டு மாதங்களின் போது இணையத்தள நுழைவுகள் 30.3 ஆக (100 ஆட்களுக்கான இணைப்புக்கள்) உயர்வடைந்து மொத்த இணையத்தள இணைப்புகள் 19.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2018 யூன் இறுதியிலுள்ளவாறு இணையத்தள இணைப்புகளின் அதிகரிப்பானது நிலையான இணைத்தள இணைப்புகளினதும் செல்லிட இணையத்தள இணைப்புகளினதும் முறையே 25.6 சதவீதம் மற்றும் 18.3 சதவீத வளர்ச்சியின் மூலம் ஆதரவளிக்கப்பட்டிருந்தது.

- **2018இன் முதலரைப் பகுதியின் போது தொலைத் தொடர்பூட்டல் துறையின் அபிவிருத்திக்கு இலங்கை தொலைத் தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மையும் தொடர்ந்தும் ஆதரவளித்தன.** இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது கொழும்பு தலைமை அலுவலக விரிவாக்கச் செயற்றிட்டத்தின் பூர்வாங்க வடிவமைப்பினை பூரணப்படுத்தியதுடன் செயற்றிட்டத்திற்கான அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக்கொள்ளும் செயன்முறையினை முன்னெடுத்தது. இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை, 2018இன் போது பல செயற்றிட்டங்களை நிறைவுசெய்வதற்கு திட்டமிடுகின்றது. இது இலங்கை அரசாங்க வலையமைப்பு பதிப்பு 2.0 செயற்றிட்டம், இலங்கை அரசாங்க கிளவுட் 2.0 செயற்றிட்டம், ஊழியர் சேம நிதி முகாமைத்துவ முறைமைக்கான வியாபாரச் செயன்முறை மேம்படுத்தல் ஆய்வு, இ-அரசாங்கக் கொள்கையின் கீழ் கொள்கை ஆவண மற்றும் பொதுமக்கள் செவிமடுத்தல் செயலமர்வு மற்றும் வினைத்திறன் மிக்க சேவையினை வழங்கும் அதேவேளை நாட்டின் டிஜிட்டல் உட்கட்டமைப்பினை

3

அட்டவணை 3.6

தொலைத்தொடர்பூட்டல் பணிகள்

| வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை | 2017 யூன் இறுதியில் | 2018 யூன் இறுதியில் (அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| பொருத்தப்பட்ட தொலைபேசிகள் ('000) | 2,514 | 2,531 | 0.7 |
| செலூலர் தொலைபேசிகள் ('000) | 28,113 | 30,209 | 7.5 |
| இணையத்தள இணைப்புக்கள் ('000) (ஆ) | 5,479 | 6,561 | 19.7 |
| மொத்தத் தொலைபேசி அடர்த்தி | 142.8 | 151.2 | 5.8 |
| செலூலர் தொலைபேசி அடர்த்தி | 131.1 | 139.5 | 6.4 |

*மூலங்கள்:* இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது
(ஆ) செலூலர் இணையத்தள இணைப்புக்கள் உள்ளடங்கலாக
(இ) 100 நபர்களுக்கான தொலைபேசிகள்

3

அபிவிருத்தி செய்வதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலகத்திற்காக 358 வெப்தளங்களை நகலிப்பகுத்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. இச்செயற்றிட்டம் நிறைவுபெற்றதுடன் பாதுகாப்பு வலையமைப்பின் ஊடாக பல அரசாங்க இ-சேவைகள் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும் 2018இன் முதலரைப் பகுதியின் போது தொலைத் தொடர்பூட்டல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சானது இலங்கையின் டிஜிட்டல் உபாயத்தினை அபிவிருத்தி செய்வதற்காக பல செயற்றிட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்ததுடன் இது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் டிஜிட்டல் அறிவினை அதிகரித்தல் மற்றும் இணையத்தள விடயங்கள், இணையத்தள பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

## சமூக உட்கட்டமைப்பிலான அபிவிருத்திகள்

### நலத்துறை

- **2018இன் முதலரைப் பகுதியின் போது அரசாங்க நலத்துறையில் கிடைக்கத்தக்க மனித வளங்கள் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் வழிமுறைகளை எடுத்தது.** 2018 யூன் இறுதியளவில் அரசாங்க வைத்தியசாலைகளில் 19,692 தகைமைபெற்ற வைத்தியர்களும் 34,714 தாதிகளும் காணப்பட்டனர். இது 1100 நபர்களுக்கு ஒரு வைத்தியரினையும் 624 நபர்களுக்கு ஒரு தாதியினையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அரச வைத்தியசாலைகளில் மொத்தமாக 76,824 படுக்கைகள் காணப்பட்டதுடன் இது 1000 நபர்களுக்கு 3.5 படுக்கைகளை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், 2018இன் யூன் இறுதியளவில் 5,210 படுக்கைக் கொள்ளவுடனும் 25,378 பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுடனும் 102 அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலைகள் காணப்பட்டன. அதேவேளை நலத்துறையின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு 2018இன் முதலரைப்பகுதியின் போது பல பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. கண்டி போதனா வைத்தியசாலை, சிலாபம் மற்றும் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைகள் போன்ற நிரல் அமைச்சு வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை களுபோவில போதனா வைத்தியசாலையில் மிலேனியம் வார்ட் கட்டடத்தொகுதிக்கான நிருமாணப் பணி மற்றும் பொலநறுவை மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்தி என்பனவும் மீளாய்வுக்குட்படும் காலப்பகுதியின் போது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, கண்டி பொது வைத்தியசாலையில் எண்பு மச்சை மாற்றுப் பிரிவின் நிருமாணமும் கராப்பிட்டிய மற்றும் அம்பாறை சிறுவர் விசேட கவனிப்புக் கட்டடத்தொகுதியை நிறுவுதலுதம் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, இரண்டாம் நலத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச மருந்தாக்கல் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திக் கொள்ளளவினை புனரமைத்தல் மற்றும் விரிவுபடுத்தல் நடவடிக்கைகள் மீளாய்வுக் காலத்தின் போது தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, நோயாளர்களுக்கு சில நிவாரணங்களை வழங்கும் நோக்குடன் 2018 ஓகத்து முதல் உடனடியாக செயற்படும் விதத்தில் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசிய மருந்துகளின் விலையினைக் குறைப்பதற்கு பல வழிமுறைகளை அரசாங்கம் எடுத்தது. எவ்வாறாயினும், விலைக் குறிப்பானது இலங்கைக்கான உயர்தர மருந்து பொருட்களின் இறக்குமதியினை தடைசெய்யமாட்டாது என்பதை உறுதிசெய்யவேண்டியது மிகவும் அத்தியாவசியமாகும். மேலும் ஸ்கான், ஆய்வுகூடப் பரிசோதனைகள், மற்றும் சத்திரசிகிச்சைகள் போன்ற தனியார் நலத்துறை சேவைகளின் விலைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை வழிகாட்டல்களை வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளது.

- **மீளாய்வுக் காலப்பகுதியின் போது இலங்கையில் பல தொற்று நோய்கள் பரவல் அறிக்கையிடப்பட்டிருந்தன.** தீவிர பருவகால வைரஸ் நோய்ப் பரவல் ஒன்றினை நாடு எதிர்கொண்டதுடன் வைரஸ் நோய் பரவலும் தொடர்புபட்ட இறப்பு வீதமும் தென்மாகாணத்தில் உயர்வாகக் காணப்பட்டன. அதேவேளை 2018இன் முதல் ஏழு மாதங்களின் போது முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவாகிய 1,666 மஞ்சற்காமாலை நோயாளர்களுடன் ஒப்பிடுகையில் 2,579 ஆக அதிகரித்தது. மறுபுறத்தில் டெங்கு நோய்ப் பரவலானது 2018இன் முதல் ஏழு மாதகாலப்பகுதியின் போது 2017இன் தொடர்பான காலப்பகுதியில் 100,000 பேருக்கான டெங்கு நோயாளர் விகிதம் 597ஆக பதிவுசெய்யப்பட்ட உயர்ந்தளவான எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 100,000 பேருக்கு 154ஆக இருந்தது. காணிகளைப் பரிசோதிக்கும் பாரியளவான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நோய்க்காவி கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள், நோய்க்காவிகளைப் அதிகரிக்கச் செய்யும் காணி

உரிமையாளர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட சட்டரீதியான நடவடிக்கைகள் மற்றும் ஊடக நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் என்பன 2018இல் டெங்கு பரவலின் தீவிரத்தினைக் குறைப்பதற்கு பங்களித்தன. அதிகரித்த டெங்கு நோயாளர்கள் மற்றும் பரவல்களை முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்கு ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட நோய்க் கண்காணிப்பிற்கு மேலதிகமாக தொற்று நோய்ப்பிரிவின் கூட்டு முயற்சியில் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கண்காணித்தல் 2018இல் வலுப்படுத்தப்பட்டது. நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் உயர் சார்ந்தநிலை அலகுகளை நிறுவுவதற்கு அரசாங்கம் ரூ.200 மில்லியன் ஒதுக்கீடு செய்திருந்தது. அதேவேளை, ஆண்டின் முதல் ஏழுமாத காலப்பகுதியின் போது 40 டெங்கு தொடர்பான மரணங்கள் அறிக்கையிடப்பட்டிருப்பதுடன் அதற்கமைய, டெங்குப் இறப்பு வீதம் 2017இன் முதல் ஏழுமாத காலப்பகுதயில் பதிவாகிய 0.28 சதவீதத்திலிந்து இவ்வாண்டின் அதே காலப்பகுதியில் 0.12 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

- **நலப் பணிகளை வழங்குவதில் தனியார் துறை தொடர்ந்தும் முக்கிய பங்கொன்றினை ஆற்றியிருந்தது.** 2018 யூன் இறுதியளவில் 334 படுக்கைகளுடன் 15 தனியார் ஆயுர்வேத வைத்தியசாலைகள் உள்ளடங்கலாக 5,095 படுக்கைகளுடன் 191 பதிவுசெய்யப்பட்ட தனியார் வைத்தியசாலைகள் காணப்பட்டன. 2018 யூன் இறுதியிலுள்ளவாறு, 114 பதிவுசெய்யப்பட்ட தனியார் மருத்துவ மற்றும் வைத்திய ஆலோசனை நிலையங்களும் 381 முழுநேர மற்றும் பகுதிநேர மருத்துவ சிகிச்சை நிலையங்களும் காணப்பட்ட அதேவேளை 291 தனியார் மருத்துவ ஆய்வுகூடங்கள் தொழிற்பட்டன.

## கல்வி

- **அரசாங்கப் பாடசாலைகளினால் வழங்கப்படும் பொதுக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் அதன் முயற்சிகளை மேம்படுத்தியிருந்தது.** அரசாங்கமானது 492 புதிய ஆசிரியர்களை ஆட்சேர்பு செய்ததுடன் குறிப்பாக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதக் கல்வி போன்றன தொடர்பில் கல்விச் சேவை வழங்குதல் மீதும் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் மீதும் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள் மற்றும் மாகாண அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது. அதேவேளை, கல்வி அமைச்சு, வலய மற்றும் பிரதேச கல்வி அலுவலகங்கள் மூலம் நடாத்தப்பட்ட கல்விச் சேவைகளின் தரத்தினைக் கண்காணித்தலுக்கான வெளிவாரி மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக ஏறத்தாழ 24,200 ஆசிரியர்கள் மதிப்பீடு செய்யப்பட்டனர். அதேவேளை 2018 யூன் இறுதிவரையான காலப்பகுதியில் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான செலவினம் 10.4 பில்லியனாகவிருந்தது.

- **நிகழ்ச்சித்திட்டத்தின் ஆக்கபூர்வமான அங்கீகரித்தலின் தெளிவுபடுத்தலை உறுதிசெய்வதற்கு ஆசிரியப் பதவியணியினை வலுப்படுத்துவதற்கான தேவைக்கு மத்தியிலும் 2018இன் முதலரைப்பகுதியின் போது 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.** ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்தர பாட அலகுகள் ஊடாக ஒன்பது பொதுப் பாடங்கள் மற்றும் பிரயோகப் பாடக்கூறுகளை உள்ளடக்குகின்ற வகையில் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்திற்கான புதிய தொழில்சார் பாடப் பிரிவொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முயற்சியுடன் தொடர்புடைய முன்னோடிச் செயற்றிட்டத்தின் முதலாம் கட்டம் 2017இல் 42 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இரண்டாம் கட்டம் 2018இல் 153 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், இம்முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் முறையே 850 ஆசிரியர்களும் தற்போதுள்ள பதவியணியிலிருந்து 1,274 ஆசிரியர்களும் பாடங்களைக் கற்பிப்பதற்குப் பயிற்றுவிக்கப்பட்டன.

- **நோய்கள், விபத்துகள் மற்றும் ஏனைய காயங்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு காப்புறுதி நலன்களை வழங்கும் நோக்குடன் சுரக்ஷா பாடசாலை மாணவர் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தினை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.** அனைத்து அரசாங்கப் பாடசாலைகள் அரசாங்க உதவிபெற்ற, உதவிபெறாத தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள், உதவிபெற்ற விசேட பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகள் ஆகியவற்றிலுள்ள 1 தொடக்கம் 13ஆம் தரங்கள் வரை கற்கின்ற 5 தொடக்கம் 19 வயதுக்கிடைப்பட்ட மாணவர்கள் இம்மருத்துவக் காப்புறுதிக்கு உரித்துடையவராவர். இத்திட்டத்தின் கீழ் மாணவர் ஒருவருக்கு ரூ.200,000 கொண்ட உயர்ந்தபட்ச காப்புறுதிக் காப்பீடு வழங்கப்படுகின்றது. அதற்கமைய, 10,194 அரசாங்கப் பாடசாலைகள், 80 அரசாங்க அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகள், 753 பிரிவெனாக்கள் மற்றும் 220 சர்வதேச பாடசாலைகளின் 4.45 மில்லியன் மாணவர்கள் இக்காப்புறுதித் திட்டத்தின் மூலம் காப்பிடப்பட்டுள்ளனர்.

- **அரசாங்கப் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் கல்விச் சேவைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் வழிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2018இன் முதலரைப்பகுதியின் போது குறிப்பாக, விஞ்ஞானத்துடன் தொடர்புடைய கற்கை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அழுத்தம் கொடுத்து மூன்று பட்டப்படிப்பு கற்கைநெறிகள் நான்கு பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகள் 19 புதிய திணைக்களங்கள்

3

3

மற்றும் ஒரு மருத்துவபீடம் என்பவற்றிற்கு அனுமதி வழங்கியிருந்தது. 2017இல் இடம்பெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையின் அடிப்படையில் 2017/2018 கல்வி ஆண்டிற்காக 30,141 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்ட அதேவேளை, மேலதிக உள்ளெடுப்பின் கீழ் மேலும் 372 மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதேவேளை, 2017/2018 கல்வியாண்டிலிருந்து பல்கலைக்கழ அனுமதிக்காக விண்ணப்பிக்கின்ற மாணவர்களை இனங்காண்பதற்கும் பல்கலைக்கழக அனுமதியின் வினைத்திறனையும் வெளிப்படைத்தன்மையினையும் உறுதிசெய்வதற்கு பல்கலைக்கழக அனுமதிகளுக்காக அபேட்சகர்களின் மாவட்டத்தினை நிர்ணயிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து தேர்தல் பதிவேடுகளை பெற்றுக்கொள்வதற்கும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூட்டிணைந்துள்ளது. அதேவேளை, கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணையப்பெற்ற சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் நிறுவப்பட்டது. மேலும், அரச பல்கலைக்கழகங்களினதும் நிறுவனங்களினதும் மற்றும் கற்கைநெறி மீளாய்வுகளினதும் உள்ளார்ந்த உத்தரவாத அலகுகளுக்கு துணையளிக்கின்ற தரநியமங்கள் மற்றும் அளவீடுகளை நிறுவுவதில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உத்தரவாதம் மற்றும் தராதரச் சபை அதன் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது.

- **அரச பல்கலைக்கழக முறைமையில் கிடைக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களின் பின்னணியில் மூன்றாம் நிலைக் கல்வித்துறையில் தனியார் துறை தொடர்ந்தும் முக்கிய பங்கொன்றினை ஆற்றியிருந்தது.** 2018 யூலை நடுப்பகுதியளவில் 120 உள்நாட்டு பட்டப்படிப்பு கற்கைநெறிகளை வழங்குகின்ற 17 பட்டம் வழங்கும் அரசசாரா உயர் கல்வி நிறுவனங்கள் காணப்பட்டன. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் போது ஐந்து அரசசாரா உயர் கல்வி நிறுவனங்களின் 21 புதிய பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டன. அதேவேளை, 2009 செத்தெம்பர் 15 மற்றும் 2017 மே 15ஆம் திகதிகளுக்கிடையில் தென்னாசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனத்தில் (சைட்டம்) மருத்துவப் பட்டப்படிப்பிற்காகப் பதிவுசெய்தவர்களில் அடிப்படை நுழைவுத் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டப்படிப்பு கற்கைநெறியினைத் தொடர்வதற்காக தென்னாசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களை கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழத்திற்கு உள்ளீர்ப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. அரச மற்றும் அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களுக்கு மேலதிகமாக வேறு பல தனியார் நிறுவனங்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு தகைமைகளை வழங்குகின்ற கற்கைநெறிகளை நடாத்தின.

- **2018இன் இறுதியளவில் தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்விப் பயிற்சித் துறையானது 873 பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்களை உள்ளடக்கியிருந்ததுடன் இதில் 388 நிறுவனங்கள் அரசாங்க நிறுவனங்களாகும்.** 2018இன் முதலரைப்பகுதியின் போது இந்நிறுவனங்கள் 1,888 ஒப்புதலளிக்கப்பட்ட பாடநெறிகளை வழங்கின. வளங்களின் பற்றாக்குறை காரணமாக தொழில்நுட்பம் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களினால் மாத்திரம் போதியளவு வழங்கப்பட முடியாத ஆனால் அதிகளவு கேள்வியுள்ள தேர்ச்சிகள் மீதான பயிற்சியினை வழங்கும் நோக்குடன் "பயிற்சிக் கொள்வனவு மாதிரி" என்ற தலைப்பிலான புதிய பயிற்சி அணுகுமுறையொன்றினை திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சானது அறிமுகப்படுத்தியது. அதற்கமைய, தனியார் துறை தொழில் தருநர்கள் செலவுப் பகிர்வு அடிப்படையில் அரசாங்க மற்றும் தனியார் தொழில்நுட்பம் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களினால் தமது பணியாளர்களை பயிற்றுவிப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றனர். அதேவேளை, 2018இன் இறுதியளவில் தொழில்நுட்பம் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது தனது கொள்கைக் கட்டமைப்பினை இற்றைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது. உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப தொழிற்பயிற்சி ஆணைக்குழுவானது விசேடமாக வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள இளைஞர்களுக்காக பல்வேறுபட்ட தொழில்நுட்பம் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியிருந்தது.

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு

- **2018இன் முதலரைப்பகுதியின் போது தொடர்புடைய அரசாங்க அமைச்சுகளின் கீழ் குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் வீடமைப்புச் செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.** பிரசைகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்குடன் உப நகரங்களில் அடிப்படை உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொள்கின்ற "சுக்கித்த புறவற" என்ற சிறிய குடியிருப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 455 துணைச் செயற்றிட்டங்களை கொண்டு நடாத்துவதற்கு ஆண்டின் ஏழு மாதங்களில் ரூ.343.6 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும், அனுராதபுரம், காலி, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி நகரங்களில் உபாய நகரங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை, 2018இல் முதலரையாண்டின் போது பல வீடமைப்புச் செயற்றிட்டங்களின் நிருமாணப் பணிகள்

முன்னெடுக்கப்பட்டன. மேலும், மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியின் போது வீடமைப்பு மற்றும் நிருமாண அமைச்சினால் பல எண்ணிக்கையான சிறியளவிலான மாதிரிக் கிராமச் செயற்றிட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டன.

- **மீளாய்வுக் காலப்பகுதியின் போது நகரப் போக்குவரத்து அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்றன.** அதற்கமைய பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் மாகும்புரயில் பல்மாதிரி இடம்மாறல் நிலையத்தின் நிருமாணம், கொட்டாவ - ஹோகந்தர வீதி மற்றும் கொட்டாவ - மாலபே வீதிக்கான வீதி அகலப்படுத்தல் செயற்றிட்டம் என்பனவற்றில் கணிசமான முன்னேற்றம் அடையப்பெற்றன. மேலும், மாலபேயிலிருந்து கோட்டைக்கான உயர்த்தப்பட்ட புகையிரதப் பாதையொன்றினை நிருமாணிப்பதனை நோக்காகக்கொள்கின்ற மென் புகையிரத போக்குவரத்துச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய பூர்வாங்கப் பணிகள் ஆண்டின் முதலரைப் பகுதியின் போது முன்னேற்றங்கண்டன. அதற்கமைய, விரிவான சாத்தியவள அறிக்கை, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, மீள் குடியேற்ற நடவடிக்கைத் திட்டங்கள் என்பன நிறைவுசெய்யப்பட்ட அதேவேளை காணி கையகப்படுத்தல் அளவீடு முன்னெடுக்கப்படுகின்றது. இச்செயற்றிட்டம் 2026இல் நிறைவுசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.


- **2018இன் முதலரைப்பகுதியின் போது பல திண்மக்கழிவு முகாமைத்துவச் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.** மீதோட்டமுல்ல காணி நிரப்புதல் பிரதேசத்தினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பு மாநகர் பிரதேசம், புறநகரங்கள் மற்றும் புத்தளம் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி அதிகார சபைகளிலிருந்து சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளை முகாமைசெய்வதற்கு அருவக்காளு என்ற இடத்தில் சுகாதார காணிநிரப்பல் பிரதேசமொன்றினை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2018 யூன் இறுதியிலுள்ளவாறு செயற்றிட்டம் 15 சதவீதம் கொண்ட பௌதீகரீதியான முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. அதேவேளை தனியார் துறைக் கம்பனிகளின் ஈடுபாட்டுடன் கழிவிலிருந்து சக்தி உற்பத்தி செய்யும் செயற்றிட்டங்கள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை மின்சார சபையானது தரப்படுத்தப்பட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தெரிவுசெய்யப்பட்ட செயற்றிட்ட கம்பனிகளுடன் கொழும்பு மாநகர சபையானது சலுகை அடிப்படையிலான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு எதிர்பார்த்துள்ளது.

- **2018இன் முதலரைப்பகுதியின் போது கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்திச் செயற்றிட்டம் முன்னேற்றமடைந்தது.** அதற்கமைய 2018 செத்தெம்பர் இறுதியளவில் காணி மீட்டலுடன் தொடர்புடைய பணிகள் 90 சதவீதத்திற்கு மேலாகவும் அலைத்தடுப்பு சுவர் நிருமாணத்துடன் தொடர்புபட்ட பணிகள் 70 சதவீதமும் நிறைவுபெற்றிருந்தன. காணி மீட்டல் நடவடிக்கைகள் 2019இன் நடுப்பகுதியில் நிறைவுசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் வறுமை ஒழிப்பு


- **நாட்டின் ஒட்டுமொத்த வறுமை மட்டங்கள் தொடர்ந்து வீழ்ச்சியடைந்த போதிலும் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காக இலக்கு வைக்கப்பட்ட முயற்சிகள் ஊடாக எஞ்சியுள்ள பாதிக்கப்படும் தன்மைகளும் ஏற்றத்தாழ்வுகளும் தீர்க்கப்படவேண்டியுள்ளது.** தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பிந்திய வீட்டலகுக்கான வருமான மற்றும் செலவின அளவீடு 2016இற்கு அமைய வறுமை எண்ணிக்கை விகிதம் 2010/13 காலத்திற்கான முந்திய அளவீடுகளில் காணப்பட்ட 6.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.1 சதவீதமாகவிருந்தது. எனினும், கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவாகிய 18.2 சதவீதம் கொண்ட அதிகூடிய வறுமை எண்ணிக்கை விகிதத்துடன் ஒப்பிடுகையில் கொழும்பு மாவட்டம் 0.9 சதவீதம் கொண்ட குறைந்த வறுமை எண்ணிக்கை விகிதத்தினைப் பதிவுசெய்துடன் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து காணப்பட்டன. அதேவேளை, பெயரளவு நியதிகளில் வறுமை எல்லைக்கு கீழ்வருகின்ற மக்களின் எண்ணிக்கை 843,913ஆக இருந்தது. எவ்வாறாயினும், குடித்தொகையில் கணிசமான பங்கு வறுமைக் கோட்டிற்கு சற்றுமேல் காணப்படுவதுடன் இயற்கை அனர்த்தங்கள் போன்ற பாதகமான அதிர்வுகள் நிகழுகின்ற போது அவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வருகின்ற இடர்நேர்வில் காணப்படுகின்றனர். உலக வங்கியின் படி இலங்கையில் கடுமையான வறுமை அதாவது நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 1.90 இற்குக் கீழ் வாழுகின்ற குடித்தொகையின் சதவீதம் (2011 கொள்வனவு சக்திச் சமநிலை நியதிகளில்) 2016இல்

வரைபடம் 3.6
தலைக்குரிய வறுமை விகிதம்




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 3.7
சமுர்த்தி/திவிநெகும நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றம்




*மூலங்கள்:* சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

0.7 சதவீதமாகவிருந்தது. அதேவேளை, நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 3.20 எல்லையினைக் கொண்டுள்ள (2011 கொள்வனவு சக்திச் சமநிலை நியதிகளில்) மிதமான வறுமையானது பன்னாட்டு எல்லைக்கு கீழ் வருகின்ற கிட்டத்தட்ட 2 மில்லியன் மக்களை எடுத்துக்காட்டி 2016இல் 9.5 சதவீதமாகவிருந்தது.

- **2018இன் முதலரைப்பகுதியின் போது சமுர்த்தி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுமார் 1.4 மில்லியன் பயன்பெறுநர்களுக்கு ரூ.19.7 பில்லியன் தொகைக்கான நிதியங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட அதேவேளை சமுர்த்தி பாதுகாப்பு நலத்திட்டத்தின் கீழ் 87,706 பயன்பெறுநர்களுக்கு ரூ.436 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.** அதேவேளை 2018இன் முதலரைப்பகுதியின் போது மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ரூ. 2.3 பில்லியன் செலவில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவுப் பொதிகளை தொடர்ந்தும் வழங்கியது. எனினும், இம்முயற்சிகளுக்கு மத்தியில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடித்தொகை மற்றும் நல அளவீடு 2016இற்கு அமைவாக 5 வயதுக்கு கீழ்பட்ட குழந்தைகள் மத்தியில் வளர்ச்சிகுன்றிய, குறைந்த நிறையுடைய மற்றும் தேய்வடைதல் என்பன 15 சதவீதத்திற்கு மேல் காணப்பட்டது. அதேவேளை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் 2030 அளவில் வறுமையை ஒழிக்கும் பொருட்டு நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்குகளுக்கமைவாக வலுவூட்டல் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியுள்ளது. ஆண்டின் முதலரைப்பகுதியின் போது ரூ.58.9 மில்லியன் செலவில் பயன்பெறும் குடும்பங்களை வலுவூட்டும் நோக்குடன் 218 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளுக்கான சூத்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் தொடர்ந்திருப்பது மிக முக்கியமாகக் காணப்படுகின்ற அதேவேளை இலங்கை மின்சார சபையின் கணிசமான நட்டம் மற்றும் வளர்ச்சியடைகின்ற படுகடன் தொகை என்பன மின்வலு தொடர்பில் செலவுப் பிரதிபலிப்புக் கட்டணப் பொறிமுறையொன்றிற்கான முன்கூட்டிய நடைமுறைப்படுத்தலை நியாயப்படுத்துகின்றது.** மின்வலுத் தீர்வை கட்டணங்கள் 2014ஆம் ஆண்டுமுதல் திருத்தப்படவில்லை என்பதுடன் அவை செலவு அறவீட்டு மட்டங்களுக்குக் கீழ் காணப்படுகின்றன. இலங்கை மின்சார சபையின் தொடர்ச்சியான நட்டங்கள் மின்சார சபையின் நிதியியல் ஆற்றலுக்கு சவால்களை தோற்றுவிப்பது மாத்திரமன்றி தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் திரவத்தன்மை முகாமைத்துவம் மற்றும் நிதியியல் செயலாற்றல் என்பவற்றையும் பாதிக்கின்றன. இலங்கை மின்சார சபை மூலமான பாரியளவு கடன் பெறல் அரச வங்கிகளின் ஐந்தொகையை வலுவிலக்கச் செய்துள்ளதுடன் பொருளாதாரத்தின் ஏனைய அவசியமான முதலீடுகளையும் வெளித்தள்ளுகின்றது. எனவே இத்தறுவாயில் இலங்கை மின்சார சபையானது நிதியியல் ஆற்றலின் உறுதிசெய்வதற்கும் அதேபோன்று அரசிற்கு சொந்தமான வியாபார தொழில்முயற்சியின் நட்டங்கள் மூலம் ஏற்படும் ஏனைய பேரண்டப் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் செலவுப் பிரதிபலிப்பு தீர்வைப் பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துதலானது அவசியமானதாகும்.

- **சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவராண்மை என்பவற்றின் பங்குடமையுடன் நலனோம்புகை நலச் சபையானது நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணிப்பதற்கும் சிறப்பாக இலக்கு வைப்பதற்கும் அரசாங்கத்தின் இயலளவினை வலுப்படுத்தி அதனூடாக சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைமை என்பவற்றின் வினைத்திறன், சமத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் சமூகப் பதிவகமொன்றினை உருவாக்கும் செயன்முறையொன்றில் ஈடுபட்டுள்ளது.** சமூகப் பதிவகமானது நலனோம்புகைத் திட்டத்திற்கு தகைமை உடைய அல்லது சாத்தியமாக தகைமைபெறக்கூடிய பிரசைகளின் தனியொரு பதிவகமாகும் என்பதுடன் பயன்பெறுநர்கள் தெரிவானது பொருளாதாரப் பண்புகள் மற்றும் குடும்பக் கட்டமைப்பு போன்ற பதிவகத்தில் கிடைக்கப் பெறுகின்ற பல்பரிமானத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பதிவகம் அரச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட அரசாங்க நிதியளிக்கப்பட்ட

சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கும். சமூகப் பதிவகத்துடன் நலனோம்புகைப் பயன்பெறுநர்களை நியாயமான மற்றும் வெளிப்படையான விதத்தில் இனங்காணப்படக்கூடியதாக இருப்பதுடன் இதன்மூலம் நலன்கள் உத்தேசிக்கப்பட்ட வீட்டலகுகளுக்கு சென்றடைவதை உறுதிசெய்யகின்றது. இப்பதிவகமானது நலனோம்புகை பயன்கள் முறைமைக்கு புதிய பயன்பெறுநர்களை சேர்த்துக்கொள்வதற்கு அனுமதித்ததுள்ளதுடன் நலன்கள் தேவைப்படாத வீட்டலகுகள் முறைமையிலிருந்து படிப்படியாக வெளியேறுவதனை இயலச்செய்வற்கு தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படும். மேலும், மேன்முறையீட்டுப் பொறிமுறை மற்றும் தகுதியற்ற ஆனால் சேவைகளிலிருந்து பயன்பெறுகின்றவர்கள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கான முறைமையொன்றுடனும் சமூகப் பதிவகத்துடனும் தொடராக குறைகளைக் கையாளுகின்ற முறைமையொன்று உருவாக்கப்படவுள்ளது.

- பல பாரிய வீதி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நடுத்தரகாலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. தற்போது ருவான்புர விரைவுப் பாதை, உயர்த்தப்பட்ட துறைமுக நுழைவுப் பெருந்தெரு, தெகிவளையிலிருந்து பாணந்துறைக்கான மறேன்ரைவ் என்ற கரையோரப் பாதையின் நீடிப்பு, மற்றும் பேஸ்லைன் வீதியினை கொழும்பு ஹொரன வீதியிலிருந்து இரத்மலானைக்கு விரிவுபடுத்தல் என்பவற்றின் நிருமாணத்துடன் தொடர்புடைய திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. முன்மொழியப்பட்ட 74 கி.மீற்றர் நீளமான ருவன்புர விரைவுப் பாதை, ககதொட்டுவையில் தெற்கு அதிவேகப் பாதையினை இணைப்பதுடன் பெல்மதுல்ல வரை நீடிக்கும். அதேவேளை உயர்த்தப்பட்ட துறைமுக அணுகுவழிப் பெருந்தெரு புதிய களனிப்பாலத்துடன் வெளிச்சுற்றுவட்டப் பாதையினை இணைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன் இது இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும். முதலாம் கட்டம் புதிய களனிப் பாலத்தினை இராஜகிரியவிற்கு இணைக்கும் அதேவேளை பெருந்தெருவின் இரண்டாம் கட்டம் இராஜகிரியவிலிருந்து அத்துருகிரியவிற்கு நிருமாணிக்கப்படவுள்ளது. இவ்வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்கள் கொழும்பு நகரிலும் புறநகர் பிரதேசங்களிலும் போக்குவரத்து நெரிசலினைக் குறைப்பதற்கும் அதேவேளை பிராந்திய தொடர்புத்தன்மையை வலுப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. இருப்பினும் வாகன நெரிசல், எரிபொருள் நுகர்வு என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் வினைத்திறனான முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் பொதுப் போக்குவரத்து முறைமையினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை அமுல்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.